பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

13 09 2025 SATURDAY 7.15 PM

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

1. நேபாளத்தில் இடைக்கால அரசின் பிரதமராக பதவியேற்றுள்ள திருமதி Sushila Karki-க்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. அமிர்த சரோவர் இயக்கத்தின்கீழ் நாடு முழுவதும் 68 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குளங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. பஞ்சாப் மாநிலத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்து தரும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உறுதியளித்துள்ளார்.

4. மியான்மர் ராணுவம் மேற்கு Rakhine மாகாணத்தில் நடத்திய வான்வழி தாக்குதலில் 19 மாணவர்கள் உயிரிழந்தனர்.

5. உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Meenakshi இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

-இனி விரிவான செய்திகள்-

<<<<<>>>>>>

நேபாள இடைக்கால அரசின் பிரதமராக இன்று பதவியேற்ற திருமதி Sushila Karki-க்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நேபாள மக்களிடையே அமைதி நிலவவும், நாடு வளர்ச்சிப் பாதையில் செல்லவும் இந்தியா துணை நிற்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் திருமதி Sushila Karki தலைமையிலான இடைக்கால அரசு அமைதியையும், அரசியல் நிலைப்பாட்டையும் உறுதி செய்யும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

இதுதொடர்பாக, வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், இந்தியாவின் அண்டை நாடான நேபாளம், ஜனநாயகம் மற்றும் வளர்ச்சிப் பாதையில் நீண்டகால நட்பு நாடாக திகழ்ந்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்நாட்டு மக்களின் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் இந்தியா தொடர்ந்து உதவிடும் என்றும் வெளியுறவு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

அமிர்த சரோவர் இயக்கத்தின்கீழ் நாடு முழுவதும் 68 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குளங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், ஒவ்வொரு மாவட்டத்திலும் 75 நீர்நிலைகளை புதுப்பித்தல் மற்றும் அமைக்கும் நோக்கில், கடந்த 2022-ஆம் ஆண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த இயக்கத்தை தொடங்கினார்.

வரும் வாரம் புதுதில்லியில் நடைபெறவுள்ள அமிர்த சரோவர் தேசிய பயிலரங்கில் மக்கள் பயன்பெறும் வகையில் நிலையான குளங்களை அமைப்பது குறித்தும், தண்ணீரை சேதமின்றி சேமித்து வைப்பதற்கான தொழில்நுட்பங்கள் குறித்தும் இந்த பயிலரங்கில் கற்றுத்தரப்பட உள்ளன.

அமிர்த சரோவர் இயக்கத்தை அடுத்தக்கட்டத்திற்கு கொண்டுசெல்வதற்கான முயற்சிகளையும் மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.

<<<<<>>>>>>

பஞ்சாப் மாநிலத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்து தரும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உறுதியளித்துள்ளார்.

அம்மாநிலத்தின் ரூப்நகர் மாவட்டத்தில் மழை வெள்ளதால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்ட டாக்டர் எல். முருகன், மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கு தேவையான உதவிகளை செய்துதரும் என்று கூறினார்.

மழைவெள்ளம் சூழ்ந்திருந்த வயல்களை டிராக்டரில் சென்று பார்வையிட்ட திரு எல். முருகன், விவசாயிகள் மீது மத்திய அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளதாகவும், பயிர்ச்சேதங்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார்.

<<<<<>>>>>>

லட்சிய பாரத இளைய தலைவர்களுக்கான கலந்துரையாடல் ஜனநாயக ரீதியில் அவர்கள் தங்களது கருத்துக்களை நேரடியாக பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய இளையோர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இளையோர் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இன்று தொடங்கி, அடுத்த மாதம் 15-ஆம் தேதிவரை நடைபெறும் வினாடி – வினா போட்டிகளில் இளைஞர்கள் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

மை பாரத் இணையதளத்தின் மூலமாகவும் இந்த போட்டிகளில் பங்கேற்க வசதி செய்து தரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் வளமையான எதிர்காலத்தை உருவாக்க இளைஞர்கள் தங்களை தயார்படுத்திக் கொள்வதற்கு இந்த வினாடி – வினா ஒரு தளமாக அமையும் என்று திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<>>>>>>

இந்திய கடற்படை குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் தேசிய அளவிலான கார் அணிவகுப்பை கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.

மக்களுக்கும், கடற்படைகளுக்கும் இடையேயான நெருக்கமான தொடர்பை வலுப்படுத்தும் நோக்கில் நடைபெற்ற இந்த கார் அணிவகுப்பில் 34 கார்கள் இடம்பெற்றுள்ளன.

எட்டு நாள் பயணம் மேற்கொள்ளும் இந்த கார் யாத்திரை ஆக்ரா, லக்னோ, வாரணாசி, கான்பூர் உள்ளிட்ட நகரங்களுக்கு செல்கிறது.

இதுதொடர்பாக, பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கடற்படை ஆற்றிவரும் பணிகள் குறித்தும், கடற்படை நலச்சங்கத்தின் பணிகள் குறித்தும் இந்த பயணத்தின்போது மக்களிடம் எடுத்துரைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞர்களின் திறன் மேம்பாடு, நாட்டின் கலாச்சாரம் உள்ளிட்டவற்றில் கடற்படை நலச்சங்கத்தின் பணிகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய ஒருமைப்பாட்டுக்காக ஆற்றிவரும் பணிகள் குறித்தும் மக்களுக்கு கடற்படை அதிகாரிகள் இந்த யாத்ரையின்போது எடுத்துரைக்க உள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்களால் நாட்டில் பல்வேறு தரப்பு மக்களும் பயன்பெற்று வருகின்றனர்.

இந்த சீர்திருத்த நடவடிக்கையை வரவேற்பதாக கூறிய தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த மக்கள், பொருட்களின் விலை கணிசமாக குறையும் என்று எதிர்பார்ப்பதாக கூறினர்.

*(Sound Byte – மக்கள் 49 Sec. )*

<<<<<>>>>>>

தேசிய அளவிலான மக்கள் நீதிமன்றங்கள் இன்று நடைபெற்றன.

தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில் நடைபெற்ற மூன்றாவது தேசிய மக்கள் நீதிமன்றத்தில், சட்டப்பணிகள் ஆணையக்குழு செயலாளர் நீதிபதி திரு முரளிதரன் மற்றும் மக்கள் நீதிமன்ற மாவட்ட நீதிபதி திரு மாதவ் ராமானுஜம், கூடுதல் நீதிபதிகள் திரு செல்வம், திரு கதிரவன், திருமதி ஹேமா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

நீதிமன்றங்களில் தேங்கியுள்ள வழக்குகளுக்கு விரைந்து தீர்வுகாண மக்கள் நீதிமன்றங்களை சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் ஆக்கப்பூர்வமாக

பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நீதிபதி திரு முரளிதரன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

*(Voice Byte – முரளிதரன் –28 Sec. )*

<<<<<>>>>>>

மியான்மர் ராணுவம் மேற்கு Rakhine மாகாணத்தின் Kyauktaw நகரில் நடத்திய வான்வழி தாக்குதலில் 19 மாணவர்கள் உயிரிழந்தனர். 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

தனியார் பள்ளிகளுக்கு சொந்தமான இரண்டு விடுதிகளில் Arakan படையினர் தங்கியிருக்கக்கூடும் என்ற சந்தேசத்தின்பேரில் நடத்தப்பட்ட தாக்குதலில் அப்பாவி மாணவர்கள் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலின்போது விடுதிகளுக்கு அருகில் இருந்த வீடுகளும் சேதமடைந்தன.

இந்த தாக்குதலை ஐ நா -வின் யுனிசெஃப் அமைப்பு வன்மையாக கண்டித்துள்ளது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில், இந்தியாவின் மீனாட்சி இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்தின் Liverpool-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 48 கிலோ எடைப்பிரிவு அரையிறுதியில் அவர், 5-0 என்ற புள்ளிக்கணக்கில், மங்கோலியாவின் Altantsetseg -ஐ வென்றார்.

----------------

ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 23-21, 22-20 என்ற செட் கணக்கில், தைவானின் Tien Chen Chou-ஐ வென்றார்.

--------------

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் உத்தரப்பிரதேசம் – ஜெய்பூர் அணியையும், புனே – தெலுகு அணியையும் எதிர்கொள்கின்றன.

-----------

ஆசிய கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில், இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பங்களாதேஷ் – இலங்கையை எதிர்கொள்கிறது.

அபுதாபியில் இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

<<<<<END>>>>>>